புதுவை அரசு
அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் துறை
புதுவை மாசுக் கட்டுப்பாடு குழுமம்
* * *

**செய்திக் குறிப்பு**

மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் ஐ.ஏ.ரிட் மனுவில் (சி) எண். 44727/2021. 728/2015 தேதி 29.10.2021-ல் தீபாவளி பண்டிகையின் போது, பின்வரும் ஆணை சம்பந்தப்பட்டவர்களின் கவனத்திற்காகவும் அவர்களின் செயல்பாட்டிற்காகவும் பிரசுரிக்கப்படுகிறது. இதன்படி,

i) பசுமை பட்டாசுகளை மாவட்ட நிர்வாகத்தால் முடிவு செய்யப்பட்ட இரண்டு மணி நேரம் மட்டுமே வெடிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்படி, புதுச்சேரியில் காலை 6.00 மணிமுதல் 7.00 மணிவரையிலும், இரவு 7.00 மணிமுதல் 8.00 மணி வரையிலும பட்டாசு வெடிக்க அனுமதிக்கப்படும்.

ii) சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்கும் மற்ற பட்டாசுகளுக்கு பதிலாக பசுமை பட்டாசுகள் அனுமதிக்கப்பட்டுள்ளது.

iii) அமைதி பகுதிகளாக அறிவிக்கப்பட்ட மருத்துவமனைகள், வழிபாட்டுதலங்கள், கல்விக்கூடங்கள் மற்றும் நீதிமன்றவளாகத்தின் சுற்றுவட்டாரங்களின் 100 மீட்டருக்குள் பட்டாசுகள் வெடிப்பது முழுவதுமாக தடை செய்யப்பட்டுள்ளது.

iv) பட்டாசுகள் மற்றும் வெடிகள் வெடிக்கும் இடத்திலிருந்து 4 மீட்டர் தூரத்தில் 125 டெசிபெல் அளவுக்கு அதிகமாக வெடி சத்தம் ஏற்படுத்தும் பட்டாசு வகைகள் உபயோகித்தல் தடை செய்யப்பட்டுள்ளது.

v) பொதுமக்களின் உடல் நலன் மற்றும் சூற்றுச்சூழலுக்கு கேடு விளைவிக்கக் கூடிய பேரியம் ரசாயனம் கலந்து தயார்செய்யப்பட்ட பட்டாசுகள் மற்றும் சரவெடி போன்ற பட்டாசுகளை தயாரிக்கவோ, சேமித்துவைக்கவோ ஓர் இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்க்கு கொண்டு செல்லவோ, விற்பனை செய்யவோ அல்லது வெடிக்கவோ தடை விதித்து உச்ச நீதி மன்றம் ஆணையிட்டுள்ளது.

vi) சரவெடி உற்பத்தி, பயன்பாடு மற்றும் விற்பனைக்கு தடை செய்யப்பட்டுள்ளது.

தீபாவளி பன்டிகையை மக்கள் பொறுப்புடன் கொண்டாட வேண்டும் என்றும், அவர்களின் நடவடிக்கையால் சுற்றுச்சூழல் மாசுபடாமல் இருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இயற்கையோடு இணைந்த தீபத்திருவிழாவை புதுச்சேரி மக்கள் கொண்டாட வேண்டும் என புதுச்சேரி மாசுக்கட்டுப்பாட்டு குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

அனைவருக்கும் இனிய பசுமையான தீபாவளி நல்வாழ்த்துக்கள்

உறுப்பினர் செயலர்
புதுவை மாசுக் கட்டுப்பாடு குழுமம்